

FREE EDITION

September - 2017

# ஜோதி

Jothi

Spiritual Newsletter

ஜோதி 11 : சுடர் 07 - 127

ஆன்மிகச் செய்திச்சுடர்

**மூல மந்திரம்**


ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின்**

49ஆவது

**திருமண நாள்**

**04.09.2017**



அருள்திரு பங்காரு அடிகளார்,
திருமதி இலட்சுமி
பங்காரு அடிகளாரின்
திருமண நிறைவு நன்னாளில்
நல்லாசிகளை வேண்டும்
-செவ்வாடை சக்திகள்

## தானமும் உடல் உறுப்புகளும்

**தியாகம்:**

தியாகம் என்பது தனக்குச் சொந்தமான – மிக அத்தியாவசியமான ஒன்றைப் பிறர்க்குக் கொடுப்பது, உயிரைக் கொடுத்து மற்றவர்க்கு உதவுவது உயிர்த்தியாகம் எனப்படும். ஒரு சிறுவர் பள்ளிக்கூடத்தில் தீப்பற்றிக் கொண்டது. ஆசிரியர் ஒருவர் நெருப்பின் ஊடே புகுந்து பல இளஞ்சிறார்களை வெளியே கொண்டு வந்தார். மேலும் சிறுவர்களை எடுத்துவர எரியும் கட்டிடத்துக்குள் சென்ற ஆசிரியர் நெருப்பால் சூழப்பட்டார். வெளியே வர இயலவில்லை. எரியும் கட்டிடத்துக்கு உள்ளேயே மயங்கி விழுந்து நெருப்பின் வெம்மையால் அடையாளம் தெரியாமல் உடல் கருகி உயிர்விட்டார். குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக அவர் செய்தது உயிர்த்தியாகம்.

டாக்டர் **சி.ஏ.முத்துக்கிருஷ்ணன்,** M.A., B.O.L. Ph.D.
சித்தர் பீடப் புலவர்

**தானம்:**

தன்னிடம் இருக்கும் பொருளைத் தன் மனம் விரும்பிப் பிறர்க்குக் கொடுப்பது தானம் எனப்படும். பசித்து வருவோர்க்குக் உணவிடுவது அன்னதானம் என்றும், உடைகள் போதிய அளவு இல்லாதவர்க்கு உடுத்த ஆடைகள் வாங்கிக் கொடுப்பது ஆடை தானம் என்றும் சொல்லப்படும். தமிழ் இலக்கணத்தில் ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ, உடைய என்பனவாகும். இவை தற்கிழமை பிறிதின் கிழமை என்ற இரண்டு நிலைகளில் வரும். எனது அல்லது என்னுடைய கை என்று சொல்லும்போது தற்கிழமை.

எனது அல்லது என்னுடைய பேனா என்கிறபோது பிறிதின் கிழமை எனப்படும். கிழமை என்பது உரிமை என்று பொருள் தரும். கைகள் உடலோடு ஒட்டியவை. அவை உடலுக்கு உரிமை உடையன. அதனால் எனது கைகள் எனும் போது தற்கிழமை எனப்பிறந்தது. பேனா ஒருவனுக்குச் சொந்தமானது என்றாலும் உடலோடு ஒட்டியதில்லை. உடலோடு சேர்ந்து அவனுக்கு உரிமையாக இருப்பதால் எனது கைகள் என்பது தற்கிழமை. உடலுக்குப் பிரிதாகி அவனுக்கு உரிமையாகி இருப்பதால் எனது பேனா எனும்போது பிறிதின் கிழமை எனப்படும். இதைப்போல தானத்திலும் இரண்டு வகை உண்டு.

கண்தானம், இரத்ததானம், சிறுநீரக தானம் என்பது தமிழ் இலக்கணத்தில் தற்கிழமைபோல கண்ணும், இரத்தமும், சிறுநீரகமும் உடலோடு ஒட்டி உரிமை பூண்டவை. ஆடை தானம், அன்னதானம் என்பது தமிழ் இலக்கணத்தில் பிறிதின் கிழமை போல ஆடையும், அன்னமும், உடலினின்றும் பிறிதாகி ஒருவனுக்குச் சொந்தமானவை ஆகும்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“இன்றைய அரசியல் கந்தலாக மாறி வருகிறது. நூல் பிரிகிறது.இன்னும் துணி கிழியவில்லை.”**

## "ஜோதி"
- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


தானமும் உடல் உறுப்புகளும்
Page: 1 – 5

அன்னையின் வேள்விகளும் அற்புத அனுபவங்களும்
Page: 5 - 8

UPCOMING EVENTS
Melbourne: 4, 13, 14
Sydney: 12, 15

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 13

அருள்வாக்கும் அனுபவங்களும்...
பக்கம்: 9 - 11

Divine Miracles
Page: 16

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 17

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 18


# தானமும் உடல் உறுப்புகளும்..
(1ஆம் பக்க தொடர்ச்சி)

### தர்மம்:
தர்மம் என்பது சமஸ்கிருதச் சொல்லாகும். இதற்கு நேரான தமிழ்ச்சொல் அறம் என்பதாகும். தர்மம் என்பதற்கு முறை, நெறி, ஒழுக்கம், ஈதல் என்பன பொருளாகும். ஆனால் இன்று பெரும்பாலானவர்கள் தர்மம் என்பதற்கு இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுப்பது என்று மட்டுமே பொருள் கொள்கிறார்கள். குலதர்மம், அரச தர்மம், இல்லற தர்மம் எனும்போது முறையே குலத்துக்குரிய ஒழுக்கம் அரசனுக்குரிய நெறிமுறைகள், இல்லறத்துக்குரிய கடமை என்றுதான் பொருள்படும். "பார்ப்பன பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் எனும்போது அந்தணரின் குலதர்மத்தையும், "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்களைகட் டதனொடு நேர்" எனும்போது அரசனுடை நெறிமுறையையும் "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்"எனும்போதே இல்லற தர்மத்தையும் வள்ளுவர் கூறியிருப்பது ஈண்டு நோக்கற்பாலது. எனவே தர்மம் எனும் பல்பொருள் குறித்த ஒரு சொல் பிறருக்கு ஒன்றைக் கொடுத்தலையும் குறித்தது.

### தியாகமும், தானமும், தர்மமும்:
தியாகம், தானம், தர்மம் என்ற சொற்களில் பிறருக்கு ஒன்றைக் கொடுத்தல் என்ற பொருள் இருந்தாலும் தியாகம் என்ற சொல் குறிக்கும் பொருளை மற்ற தானம், தர்மம் என்ற சொற்களால் குறிக்க முடியாது. தானம் என்ற சொல் குறிக்கும் பொருளை மற்ற தியாகம், தர்மம் என்ற சொற்களால் குறிக்க முடியாது. இதைப்போலவே தர்மம் என்ற சொல்லால் குறிக்கும் பொருளை மற்ற தியாகம், தானம் என்ற சொற்களால் குறிக்க இயலாது. வாஞ்சிநாதன் நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்தார் என்று குறிப்பிடலாம். ஆனால் வாஞ்சிநாதன் நாட்டுக்காக உயிரைத் தானம் செய்தார் என்றோ தர்மம் செய்தார் என்றோ குறிப்பிடமுடியாது. விபத்தால் மூளைச்சாவு அடைந்த இளைஞனின் கண்களை அவன் பெற்றோர்கள் கண்தானம் செய்தனர் என்று குறிப்பிடலாம். ஆனால் அவன் பெற்றோர்கள் கண் தியாகம் செய்தார்கள் என்றோ கண் தர்மம் செய்தார்கள் என்றோ குறிப்பிட முடியாது. அக்கால மன்னர்கள் அன்ன சத்திரம் கட்டி வழிப்போக்கர்களுக்குத் தர்மம் செய்தனர் என்று குறிப்பிடலாம். ஆனால் அன்னசத்திரம் கட்டி வழிப்போக்கர்களுக்கு தியாகம் செய்தனர் என்றோ, தானம் செய்தனர் என்றோ குறிப்பிட முடியாது. தொழில் முறையிலே இரண்டுமே ஒன்றுதான் என்றாலும் ஆடு மேய்ப்பானை இடையன் என்றும் யானை மேய்ப்பானை பாகன் என்றும் அழைப்பது போன்றதாகும் இது. ஆடு மேய்ப்பானை பாகன் என்றோ யானை மேய்ப்பானை இடையன் என்றோ அழைப்பதில்லை.

### உடலும் உடல் உறுப்புகளும்:
தர்மம், தானம், தியாகம் என்ற சொற்கள் ஆன்மிகத்துக்கு நெருங்கியே தொடர்புடையன ஆகும். இவற்றை மேற்கொள்பவரின் ஊழ்வினைத் துன்பங்களை அம்மா தன் அருளால் குறைக்கிறது. அம்மா பலவிதமான பொருட்களைத் தானதர்மம் செய்யும்படி கட்டளை இடுகிறது. ஆடைதானம், அன்னதானம் செய்யும்படிச் சொல்கிறது. சமுதாயப் பணிகள் செய்யும்போது பற்பல உதவிக் கருவிகள், பிழைப்பதற்கான தொழிற்கருவிகள், ஆடுகள், பசுமாடுகள் போன்ற விலங்குகளையும் தான தர்மமாகச் செவ்வாடைத் தொண்டர்கள் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் அம்மா அவர்களின் உத்தரவு பெற்றுச் செய்யப்படுவன ஆகும். இன்றைய சமுதாயத்திலே உடல் உறுப்புகளின் தானம் தேவைப்படுகிறதே. அத்தோடு மருத்துவக் கல்லூரிகளுக்கு மனிதனின் முழு உடலும் தேவைப்படுகிறதே. இதற்கெல்லாம் என்ன செய்வது? அம்மா இது பற்றி ஏதும் சொல்லவில்லையே என்று சிலர் நினைக்கிறார்கள்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# தானமும் உடல் உறுப்புகளும்..

(2ஆம் பக்க தொடர்ச்சி)

### இந்து சமய நூல்கள் குறிப்பிடவில்லை:

இந்து சமய அறநூல்களிலும் கோதானம், பூதானம், சொர்ணதானம், அன்னதானம், ஆடைதானம் போன்ற பல தானங்களைப் பற்றிய குறிப்புகளும், அத்தானங்களின் பலன்கள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் உடல் உறுப்பு தானங்களைப் பற்றிச் சமய நூல்களில் குறிப்பேதும் கூறவில்லை.

### அண்மைக்கால நூல்கள்:

பழைய இந்து சமய நூல்கள் தோன்றிய காலத்தை நிர்ணயிக்க முடியவில்லை. பிற்கால இந்து சமய நூல்கள் ஏற்பட்ட காலம் அறிய முடிகிறது. வேதங்கள், உபநிடதங்களின் காலத்தை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. எனவேதான் வேதகால நிகழ்ச்சிகளைக் கூறும்போது கி.மு. அல்லது கி.பி. எனக்கூறுவது வேதகாலம் என வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். சிலர் வேதகால நிகழ்ச்சிகளை கி.மு. இந்த ஆண்டாக இருக்கலாம் என்று யூகம் கூறுவர். துவைத அத்வைதங்களைப் பிரபலப் படுத்திய இராமானுசர், மாத்வர், ஆதிசங்கரர் போன்றவர்களின் அண்மைக்கால சமய நூல்களில் கூட உடல் உறுப்புத்தானங்களைப் பற்றி ஏதும் கூறப்படவில்லை.

### உடலுறுப்பும் உள்ளுறுப்பும்:

இந்து சமய ஞானிகள் பரமாத்வையும், ஜீவாத்மாவையும் சிலாகித்து ஆய்வு செய்து தத்துவ முடிவுகளைத் தந்தார்கள். உயிர், மனம், சித்தம், புத்தி அகங்காரம் என்ற உள்ளுறுப்புகள் பற்றிச் சிந்தித்தார்களே தவிர உடலைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை. உடல் பற்றிச் சிந்தனை இல்லாதவர்களுக்கு அதன் உறுப்புகள் பற்றி நினைவிருக்க ஏது வாய்ப்பு?

### அவசியம் ஏற்படவில்லை:

அலோபதி மருத்துவ முறையில்தான் பழுதடைந்த உடல் உறுப்புகளுக்குப் பதிலாக மற்றவரின் உடல் உறுப்புகள் பொருத்தப்படுகின்றன. கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகுதான் இந்தியாவில் அலோபதி மருத்துவமுறை பழக்கத்துக்கு வந்தது. அலோபதி மருத்துவ முறையிலும் உடல் உறுப்புகளை மாற்றிப் பொருத்தக்கூடிய அறுவை சிகிச்சை முறை மிக அண்மைக் காலத்திலேதான் ஏற்பட்டது. எனவே பழந்தமிழ் நூல்களிலும் இந்து சமயக் கொள்கையிலும் உறுப்புதானம் பற்றிக் கூறப்படவில்லை என்பது ஒரு குற்றமாகக் கருதப்பட முடியாது. உடல் உறுப்புதானம் இந்து ஆன்மிகவாதிகளால் கூறப்பட வேண்டிய அவசியம் அக்காலத்தில் ஏற்படவில்லை என்பதுதான் உண்மை. உடல், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை முறை அக்காலத்தில் இல்லை என்பதால் அதைப் பற்றிய கருத்துக்கள் எவருக்கும் எழாமற் போயிற்று.

### வாளால் அறுத்துச் சுடுதல்:

தமிழ் மருத்துவ முறையில் அறுவை சிகிச்சை முறை இருந்திருக்கிறது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. போரில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு அறுவை முறை மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு புறப்பொருள் வெண்பா மாலையில் குறிப்புகள் உள்ளன. “வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன் போல” எனக் குலசேகர ஆழ்வார் பாடுகிறார். கத்தியால் அறுத்து அப்புண்ணைப் பழுக்கக் காய்ச்சிய உலோகத்தால் சுட்டுக் காயத்தை ஆற்றுகிற சத்திர சிகிச்சை என்னும் அறுவை சிகிச்சை முறை குலசேகர ஆழ்வார் காலத்துக்கு முன்பாகவே தமிழகத்தில் பழக்கத்தில் இருந்திருக்கிறது எனத் தெரிகிறது. என்றாலும் உடல் உறுப்புகளை மாற்றிப் பொருத்தும் அளவுக்கு அன்றைய அறுவை சிகிச்சை முன்னேற்றம் அடையவில்லை. எனவே ஆழ்வார்கள் காலத்திலும் உறுப்புதானம் பற்றி ஏதும் குறிப்புக் கிடைக்கவில்லை.

### உறுப்பு பொருத்திய முதல் நிகழ்ச்சி:

முதன் முதலில் உடல் உறுப்பை மாற்றிப் பொருத்திய நிகழ்ச்சி பெரிய புராணத்திலே கிடைக்கிறது. காட்டிலே திண்ணன் என்ற வேடர் தலைவன் குடுமித்தேவர் என்ற இறைவரின் சிலைக்கு முன் தான் படைத்த மாமிசத் துண்டுகளை இறைவன் உண்ணவில்லை என்பதற்காக அழுதான். விழுந்து புரண்டான். அச்சமயம் குடுமித்தேவரின் சிலையின் கண்ணிலிருந்து இரத்தம் வடிந்து, ஒரு கண் கீழே விழுந்தது. அதைப் பொறுக்க முடியாத திண்ணன் தன்னுடைய ஒரு கண்ணை அம்பினால் தோண்டியெடுத்து இறைவனின் சிலையில் கண் விழுந்து விட்ட குழியில் பொருத்தினான். இது உறுப்பு தானம் அல்ல. அறுவை சிகிச்சையும் அல்ல என்றாலும் இழந்துவிட்ட ஒருவரின் உறுப்புக்காக மற்றொருவன் உறுப்பு பொருத்தப்பட்ட முதல் நிகழ்ச்சி இதுதான். அந்த வேடர் தலைவன் திண்ணன் இறைவனால் “கண்ணப்பா” என அழைக்கப்பட்டுக் கண்ணப்ப நாயனாரானார்.

### உறுப்பு தானமும் இரத்த தானமும்:

கண்களைப் போலவும், சிறுநீரகம் போலவும் உடலின் மற்ற உறுப்புக்களைப் போலவும் இரத்தமும் உடலின் ஒரு உறுப்பாகும் என்பது மருத்துவ விளக்கம் ஆகும்.

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – September 2017

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram
## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 01.09.2017 | Friday | ஆவணி | 16 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 03.09.2017 | Sunday | ஆவணி | 18 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 08.09.2017 | Friday | ஆவணி | 23 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 10.09.2017 | Sunday | ஆவணி | 25 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 15.09.2017 | Friday | ஆவணி | 30 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 17.09.2017 | Sunday | புரட்டாதி | 01 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 22.09.2017 | Friday | புரட்டாதி | 06 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 24.09.2017 | Sunday | புரட்டாதி | 08 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 29.09.2017 | Friday | புரட்டாதி | 13 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |

**05.09.2017 – திங்கள் - பௌர்ணமி, 19.09.2017 – செவ்வாய் - அமாவாசை**

## தானமும் உடல் உறுப்புகளும்..

(3ஆம் பக்க தொடர்ச்சி)

நம் ஆதிபராசக்தி இயக்கத்தினர் பல இடங்களில் இரத்ததான முகாம்களை நடத்தியுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடி மாவட்டத்தில் ஆத்தூர் என்னும் ஊரில் உள்ள ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தினர் நடத்திய இரத்ததான முகாமில் நானே கலந்துகொண்டு சொற்பொழிவும் செய்துள்ளேன். 2009-10ஆண்டில் நடைபெற்ற இருமுடி விழாவின் போது பிரச்சாரப் பணியிலிருந்த என்னிடம் ஆதிபராசக்தி மருத்துவமனையிலிருந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க 'ஏ ஒன்' – பாஸிட்டிவ் இரத்தம் தானமாகக் கொடுக்கக் கொடுக்கக்கூடியவர்கள் உடனே மருத்துவமனைக்குச் செல்லவும் என்று ஒலிபெருக்கியில் பலமுறை கேட்டுக்கொண்டேன்.

**ஏற்கப்பட்ட இரத்ததானம்:**

ஆதிபராசக்தி இயக்கத்திலே மன்றங்கள் விழா நடத்துகிறபோது மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள் நடத்துவதும் உண்டு. விழாவின்போது இந்த முகாம்களை நடத்த அருள்திரு அம்மா அவர்களிடம் அனுமதியும், ஆசியும் பெற்றுத்தான் நடத்துவார்கள். இரத்ததான முகாம்கள் நடத்த அம்மா அவர்கள் அனுமதி அளித்திருப்பதால் தொண்டர்கள் இரத்ததானம் செய்வதை அம்மா அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என அறியலாம். இரத்தம் என்பதும் உடலின் உறுப்புகளில் ஒன்றாகும் என்பதைப் பார்த்தோம். உடல் உறுப்புகளில் ஒன்றாகிய இரத்ததானத்தை அம்மா அவர்கள் அனுமதித்து ஏற்றுக்கொண்டார்கள் என்பதால் மற்ற உடல் உறுப்புகளின் தானத்தையும் அம்மா அவர்கள் அனுமதித்து ஏற்றுக்கொள்வார்கள் என்று கொள்ளலாம்.

(தொடர்ச்சி..5ஆம் பக்கம்)

## தானமும் உடல் உறுப்புகளும்..

(4ஆம் பக்க தொடர்ச்சி)

**அனுமதியும் ஆசியும் தரும் அம்மா:**

ஏழை எளியவர்களின் நல்வாழ்வுக்காகப் பற்பல சமுதாயப் பணிகளையும், தான தர்மங்களையும் செய்யும்படிக் கட்டளை இடும் அம்மா அவர்கள் உயிர் காக்கும் இரத்ததானத்தை அனுமதித்த கருணை வள்ளல் ஆவார்கள். கடையனையும் ஆன்மிகத்தில் கடைத்தேற்றும் கருணைக் கடலாகிய அம்மா அவர்கள் இருண்டு விட்ட உலகை ஒளிமயமாக்கும் கண் தானத்தையும், செத்துக்கொண்டிருப்பவனைப் பிழைக்க வைக்கும் சிறுநீரகத்தையும் இதயத்தையும், தானமாகக் கொடுக்க அனுமதிப்பார்கள் ஆசி தருவார்கள் என நம்பலாம். இதய தானமும், முழு உடல் தானமும், கண் தானமும் இறந்து விட்ட பிறகுதான் கொடுக்கக் கூடியன என்றாலும் நல்ல நினைவுடன் இருக்கும்போதே அத்தானங்களுக்கு ஒப்புதல் வழங்கக்கூடியன ஆகும். கொடுப்பவரும், ஏற்பவரும் பூரண சம்மதம் அளித்தால் நம் அவதார தெய்வமும் அருள் புரியும்: அனுமதியுடன் ஆசியும் தரும். ஏனென்றால் நம் குருபிரான் மக்களைக் காக்கவே வந்த கருணைக் கடல் அல்லவா!

ஓம் காக்கவே வந்தவா போற்றி ஓம்
(குரு போற்றி 101)

# “அன்னையின் வேள்விகளும் அற்புத அனுபவங்களும்”

## தளவானூர் என்ற ஊரில் ஒரு குடும்ப நல வேள்வி

**– வேம்பு**

தென்னாற்காடு மாவட்டத்தில் தளவானூர் என்ற கிராமம். பண்ருட்டி அருகே உள்ளது அது. அந்த ஊரில் ஓர் அன்பர், கடவுள் நம்பிக்கையே இல்லாதவர். பூசை, வழிபாடு, சடங்கு என்பனவெல்லாம் அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதுபவர்.
அவருடைய மனைவிக்குச் சகோதரர் ஒருவர். இவர் அம்மாவின் பக்தர் ஆழ்நிலை தியானம் பயின்று வருபவர். அவ்வப்போது தியானத்தின் மூலம் பல அனுபவங்களை அன்னை இவருக்குக் கொடுப்பது உண்டு.

**விரோதிகள் வைத்த செய்வினை:**
தன் சகோதரியின் கணவருக்கு நிலபுலன்கள் எல்லாம் உண்டு. நான்கு ஏக்கர் நிலத்தில் கரும்பும் 50 ஏக்கர் நிலத்தில் சவுக்கும் பயிரிட்ட விவசாயி. அவருக்குச் சில விரோதிகள்!

அந்த விரோதிகள் செய்வினை காரணமாக அவர்க்குப் பல தொல்லைகள். வீட்டிலிருந்து பணம் கொள்ளை போயிற்று. மின்சார மோட்டார் பழுதடைந்தது. மகசூலில் நஷ்டம். நில புலன்கள் இருந்தன. நிம்மதி இல்லை. தன் சகோதரி குடும்பம் பல தொல்லை அனுபவிக்கிறதே..! சகோதரி கணவரோ அதற்கான காரணம் புரியாமல் அல்லல்படுகிறாரே என்று மைத்துனர் வருந்தினார்.

**மைத்துனர் அறிவுரை:**
‘உன் சகோதரியின் கணவனும் அவன் குடும்பமும் பகைவர்களின் செய்வினை காரணமாகவே அல்லல்படுகின்றார்கள்’ என்பதை அம்மா அந்தப் பக்தருக்குத் தியானத்தில் உணர்த்தினாள்.
இதைச் சொன்னால் தம் சகோதரியின் கணவர் நம்பமாட்டாரே…! என்ன செய்வது? உரிய காலம் வரட்டும் என்று மைத்துனர் காத்திருந்தார்.

**குடும்பத் தலைவி கண்ட கனவு:**
அந்தச் சகோதரியின் கனவிலும் அம்மா ஓர் கனவு அனுபவத்தைக் கொடுத்தாள். அது பற்றித் தன் சகோதரரிடம் விளக்கம் கேட்டார் அந்தப் பெண்மணி.

”நம் ஊர் ஆதிபராசக்தி மகளிர் மன்றத்திலிருந்து வேள்விப் பூசையில் வைக்கப்பட்ட விளக்கு ஒன்றை வாங்கி வந்து வீட்டு வாசற்படியில் வைத்து நான் 108 மந்திரம் படிக்கிறேன். அப்போது என் மாங்கல்யம் ஆடிக்கொண்டிருக்கிறது. செவ்வாடையில் இருக்கும் நீ, 108 மந்திரம் முடிந்ததும் அருகில் வந்து, ஊசலாடும் என் மாங்கல்யத்தைப் பிடித்துப் பார்க்கிறாய். இப்படி ஒரு கனவு. இதற்கு என்ன அர்த்தம்?”என்று சகோதரனைக் கேட்டார் அந்தப் பெண்மணி.

“உன் வீட்டில் குடும்ப நல வேள்வி ஒன்றை நடத்து! என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்!”என்றார் அவரது சகோதரர்.
எப்படியோ கணவனைச் சம்மதிக்க வைத்துத் தளவானூரில் அந்த அன்பரின் வீட்டில் குடும்ப நல வேள்வி செய்ய ஆயத்தமானார் அந்தப் பெண்மணி. சகோதரரும் அந்த வேள்விக்குரிய பணிகளைச் செய்தார்.

(தொடர்ச்சி..6ஆம் பக்கம்)

# "அன்னையின் வேள்விகளும்...

**வேள்வியில் நடந்தவை:**

08.03.1991 அன்று தளவானூர் அன்பர் இல்லத்தில் அந்தக் குடும்பநல வேள்வி நடைபெற்றது. மூலமந்திரத்துடன் வேள்வி தொடங்கிற்று. 1008 மந்திரங்களுடன் வழிபாடு தொடர்ந்தது. தீப்பிழம்பு கொழுந்துவிட்டு எரிந்தபடி இருந்த அந்த யாக குண்டத்தில் திடீரென்று தீ அணைந்தது.

**வேள்வித் தொண்டர் திணறல்:**

1008 மந்திரம் படித்துக் கொண்டிருந்த தொண்டர்கள் 501 மந்திரத்திற்குப் பிறகு மேலே படிக்க முடியாமல் திணறினார்கள்.

ஒரு தொண்டர் எலுமிச்சம்பழம் பிழிந்து திருஷ்டி சுற்ற முயன்றார். கையைத் தூக்க முடியவில்லை. கண்கள் சுழல்வது போலவும் பார்வை மங்குவது போலவும் இருந்தது. மயங்கியபடி "வேறு யாராவது திருஷ்டி சுற்றுங்கள்"என்று சோர்ந்து தள்ளாடியபடி ஓர் ஓரமாகப் போய்ச் சாய்ந்து படுத்துவிட்டார்.

**சிலர் கண்களுக்குத் தென்பட்ட உருவம்:**

அப்போது...

யாரும் எதிர்பாராத ஓர் நிகழ்ச்சி அங்கே நடந்தது. வேள்வியைத் தரிசித்தபடி அங்கிருந்த பொதுமக்கள் சிலர் கண்களுக்கு மட்டும் தெரியும்படி கன்னங்கரேல் என்ற நிறத்தில் ஓர் உருவம் வீட்டின் உள்ளிருந்து வெளிவந்தது.

அது வேள்வி நடைபெற்ற இடத்தைத்தாண்டி வெளிவந்தபோது அங்கிருந்தவர்கள் விலகி வழிவிட்டபடி அச்சத்துடன் "ஓம் சக்தி! ஓம் சக்தி!" என்று அபயகுரல் எழுப்பினார்கள்.

வெளியே வந்த அந்த உருவம் வீட்டின் வெளியே இருந்த ஆல மரத்தின் கிளைக்குத் தாவுவதையும், அம்மரத்தின் கிளை மளமள என்று முறிவதையும் அந்த வீட்டின் தலைவரும் பார்த்தார். அங்கிருந்த வேறு சிலரும் பார்த்தனர்.

தடங்கலுக்குப் பிறகு மீண்டும் அந்த வேள்வி நல்ல முறையில் தொடர்ந்து நிறைவடைந்தது. ஆனாலும் வெளியேற்றப்பட்ட அந்தத் தீய சக்தியின் கோபம் தொடர்ந்தது. ஆயினும் அன்னையின் திருவருட் சக்தி இடைப் புகுந்து காப்பாற்றியது.

(தொடர்ச்சி..7ஆம் பக்கம்)


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam,**

**Melmaruvathur 603319, Tamil Nadu, South India.**

# “அன்னையின் வேள்விகளும்...

**கரும்புத் தோட்டத்துக்குத் தீ வைத்தது:**
இக்குடும்பநல வேள்வி நடைபெற்று முடிந்த மறுநாள் அந்த அன்பரின் கரும்புத் தோட்டத்தின் நான்கு திசைகளிலும் சுற்றித் திட்டு திட்டாகத் தீ வைத்துக் கொளுத்தியிருந்தார்கள் விரோதிகள்.

கரும்பு அறுவடையாகும் காலம் அது! கரும்புச் சோலைகள் காய்ந்து கிடக்கிற அந்த நிலையில் ஒரு மூலையில் தீப்பற்றினாலே போதும். கரும்புத் தோட்டம் முழுவதுமே இரையாகிப் போயிருக்கும். ஆனால் நடந்ததோ...வேறு.

நான்கு மூலைகளிலும் வைத்த நெருப்பு சுற்றிப பரவாதபடித் திட்டுத்திட்டாக எரிந்து பின்பு அப்படியே அணைந்துவிட்டது. யாரும் முன் வந்து அணைக்காமல் தானாக அப்படி அப்படியே நான்கு மூலைகளிலும் அணைந்ததே எப்படி..?

ஒரு மூலையில் பிடித்த தீ நன்கு காய்ந்த கருப்பஞ்சோலையில் மேலும் படராமல் - யாருமே அணைக்காத நிலையில் பற்றி எரிந்து மேலும் படராமல் அணைந்தது எப்படி?

**கிராமத்தார் வியப்பு:**
இந்தக் காட்சியை நேரில் கண்ட கிராம விவசாயிகள் அதிசயப்பட்டுப் போனார்கள்.

“ஏதோ அந்தப் புண்ணியவான் நேற்று யாக பூஜை செய்தான். அன்னதானம் செய்தான்.

எவன் வைத்த நெருப்போ..? யார் வைத்த நெருப்போ ..? அவன் கும்பிட்ட பராசக்தி அவன் தோட்டத்தைக் காப்பாற்றியது. அது மட்டுமல்ல.. அந்தச் சவுக்குத் தோப்பையும் காப்பாற்றியது. பக்கத்திலிருந்த நம் கரும்புத் தோட்டமும் பிழைத்தது. இதெல்லாம் தெய்வச் செயல்”எனக்கூறி ஊரே ஆச்சரியப்பட்டது.

**அந்தத் தீய சக்தியின் கோபம்:**

தளவானூர் வீட்டிலிருந்து வெளியேறிய அந்தத் தீய சக்தியின் கோபம் அத்துடன் நின்றதா..? இல்லை.. அது தென்னாற்காடு மாவட்ட வேள்விக்குழுத் தலைவர் திரு.கோவிந்தராஜ் அவர்களின் மேல் பாய்ந்தது. அது ஒரு தனிக்கதை!

தளவானூருக்கு நம் வேள்விக்குழு தொண்டர்களை அனுப்பினோமே... வேள்வி நல்லபடி முடிந்ததா? திருப்திதானா..? என விசாரித்துவிட்டு வரலாம் என்ற நோக்கத்தோடு தென்னாற்காடு மாவட்ட வேள்விக்குழுத் தலைவர் சக்தி கோவிந்தராஜ் பண்ருட்டியிலிருந்து தளவானூர் சென்றார்.

வேள்வி நடந்ததோ 8.3.1991. அவர் விசாரிக்கப் போனதோ 29.3.1991. 20 நாட்கள் கழித்தே புறப்பட்டார்.

தளவானூர் வந்த சக்தி கோவிந்தராஜ் அந்த அன்பரைச் சந்தித்துக் குடும்பநல வேள்வி பற்றி விசாரித்தார்.

கன்னங்கரேல் என்ற ஓர் உருவம் வெளியேறியதும் ஆலமரக் கிளையில் தாவியதும், மறுநாள் கரும்புத் தோட்டத்தில் எதிரிகள் நெருப்பு வைத்ததும், அன்னையின் திருவருள் காப்பாற்றியதும் வேள்விக்குப் பிறகு வீட்டில் அடிக்கடி களவு போவது நின்றதும் கதை கதையாகக் கூறினார் அந்த அன்பர்.

சக்தி கோவிந்தராஜ் அவர்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்து, அந்த ஆலமரத்தையும் சுற்றிப் பார்த்து, முறிந்து விழுந்த கிளைகளையும் பார்த்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு பண்ருட்டி வந்து சேர்ந்தார்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆவணி – அமாவாசை–பௌர்ணமி :**

புத்திரப்பேறு உண்டாகும்.
குழந்தைப்பேறு இல்லாத குறை நீங்கி நல்ல மக்களைப் பெறும் அதிர்ஷ்டம் உண்டாகும்.

**புரட்டாசி – அமாவாசை–பௌர்ணமி :**

பசுக்கள் விருத்தி உண்டாகும்.
கால்நடைச் செல்வம் பெருகி நிறைந்த பால் வளப்பெருக்கம் உண்டாகும்.

# "அன்னையின் வேள்விகளும்...

**கோவிந்தராஜ் கனவில் கண்ட காட்சி:**

அன்று மாலை பண்ருட்டி ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் வெள்ளிக்கிழமை வழிபாடு. வழிபாட்டில் பங்கு கொண்டு வீடு திரும்பினார். கை, கால்களைத் தூய்மை செய்துகொண்டு, பூஜையறை சென்று வழிபட்டுவிட்டு உணவருந்திவிட்டுப் படுக்கையில் வந்து படுத்தார் திரு.கோவிந்தராஜ் அன்று இரவு அவர் கனவில் ஒரு காட்சி.

அடிகளார் உருவில் அம்மா வீட்டிற்கு வருகிறாள். பூஜை அறைக்குள் விரைவாக நுழைகிறாள். கற்பூரத்தட்டை எடுக்கிறாள். சக்தி கோவிந்தராஜ் எங்கெங்கு நடந்தாரோ அந்த இடமெல்லாம் அம்மா கற்பூரத்தட்டை ஏந்தியபடிச் சுற்றி வருகிறாள். இப்போது அவர் படுக்கை அறைக்குள் நுழைகிறாள். அந்த அறையில் நான்கு மூலைகளிலும் நின்று கற்பூர தீபாராதனை காட்டியபடி வெளியே போ! வெளியே போ! வெளியே போ! என்று மூன்று முறை யாரையோ பார்த்து உரத்த குரலில் கடுமையாக ஆணையிட்டு எச்சரிக்கை செய்கிறாள். அவ்வளவுதான்! கனவு கலைந்து விடுகிறது.

அம்மா ஏன் வந்தாள்? ஒவ்வொரு இடமாக வந்தாளே ஏன்? வெளியே போ! என்று யாரைப் பார்த்து அதட்டி விரட்டினாள்? உறக்கம் வராமல் அன்று நடைபெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைவு கூர்ந்தார்.

அந்த ஆலமரத்துக்குச் சென்றது. அதைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது.. அந்தத் தீய சக்தியும் தன்னைத் தொடர்ந்து வந்தபடி இருந்ததுபோலும்! வீட்டில் நம் கால்பட்ட இடமெல்லாம் அம்மா கற்பூரத்தட்டு ஏந்தியபடி சுற்றி வந்ததற்கு காரணம் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டார்.

அந்தப் படுக்கையறையைத் தன்வசமாக ஆக்கிக்கொள்ள அந்த தீய சக்தி முனைந்திருக்க வேண்டும். அது அம்மாவுக்குத் தெரிந்த காரணத்தால் தான் வெளியே போ! என்று மூன்று முறை அதட்டி வெளியேற்றி இருக்கிறாள். சூட்சுமமாக நடைபெற்ற இந்தச் சம்பவங்களைத்தான் அம்மா நமக்குக் கனவிலும் காட்டி உணர்த்தியிருக்கிறாள் போலும்!

தன்பணி செய்யும் ஒரு தொண்டனை அவள் அடிகளார் உருவத்தில் நிழல் போலத் தொடர்ந்து வந்து காப்பாற்றுகிறாள். அவ்வாறு காப்பாற்றுவதை ஒரு சிலருக்கே இப்படிக் கனவு அனுபவங்கள் மூலமாகப் புரிய வைக்கிறாள்.

நடந்த சம்பவங்களைத் தொகுப்பைப் பார்த்து சக்தி கோவிந்தராஜ் சிந்தித்தார். அம்மாவின் கருணையை எண்ணி ஓ! என்று கதறி அழ வேண்டும் போலத் தோன்றியது.

ஓயாத வேலை! தொழில்! வியாபாரம்! என்ற காரணங்களால் அன்னையை நாம் மறந்து விடுகிறோம். விழித்திருக்கிற பல மணி நேரங்களில் அன்னையை எண்ணுகிற நேரங்கள் சில நிமிடங்கள்தான்.

ஆனாலும், நாம் தூங்கும் நேரத்திலும் கூட விழித்திருந்து நம்மை வினாடி தோறும் கண்காணித்துப் பாதுகாத்து வருகிறாள்..! இந்தக் கனவு அதைத்தானே உணர்த்துகிறது..?

ஓம் சக்தி!

## மூன்று வினைகளைத் தீர்க்கும் முக்கூட்டு எண்ணெய்

**அ**கண்டத்திலிருந்து பெறப்படும் முக்கூட்டு எண்ணெய் மூன்று வினைகளை நீக்கும். அகண்டத்திலுள்ள அந்த சுடர் ஒளியானது திரி வழியாக அகண்டத்திலுள்ள எண்ணெய்க்குச் செல்வதால் அந்த முக்கூட்டு எண்ணெய்க்கு உடல் நோய்களையும், உள்ளத்து நோய்களையும், முற்பிறவி வினைகளையும் நீக்கும் ஆற்றல் உண்டு. இந்த முக்கூட்டு எண்ணெயை பெற்றுச்சென்று பயன்பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கானோர்.

ஒன்பது வாசல் கொண்ட நமது உடம்பு. அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உள்ளது. என்பார்கள்.
ஒன்பதின் சிறப்பு : நவமணிகள் - நவகோள்கள் - நவராத்திரி – நவதானியங்கள்....

முக்கூட்டு எண்ணெயை பெற்றுச்சென்று இல்லங்களில் ஒன்பது இடங்களில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து தீபமேற்றி வழிபடுங்கள் என்று அம்மா அருள்வாக்கில் பல வருடங்களுக்கு முன்னர் அருளியுள்ளார்கள்.

நவராத்திரி அகண்ட விளக்கு எண்ணெயை எடுத்துச் சென்று அதில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து உங்கள் வீட்டில் **ஒன்பது இடங்களில்** விளக்கேற்றி வைக்க வேண்டும்.
முன்வாசல், பின்வாசல், பூசையறை, சமையலறை, பணம் வைக்கும் இடம், முதலிய முக்கியமான **ஒன்பது இடங்களில்** விளக்கேற்றி வைக்க வேண்டும்.

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## உனது நோய் செய்வினை காரணமாக வந்தது

**செ**ய்யாறு மருத்துவமனையில் நர்ஸ் பணியில் பணி புரிந்து வந்தவர் திருமதி கலைச்செல்வி. மருவத்தூரின் அருமையையும், அருள்திரு அடிகளாரின் பெருமைகளையும் புரிந்து கொள்ளாமல் மற்றவர்களோடு சேர்ந்து கிண்டலும் கேலியும் செய்து வந்தார்.

### ஒரு மந்திரவாதி வந்தது

1987ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆறாம் நாள். அவர் வீட்டிற்கு ஒரு மந்திரவாதி வந்தார். அவர் உறவினர் ஒருவர் வீட்டில் நகைகளெல்லாம் களவு போய்விட்டதால், திருடியவர் யார் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டி உறவினர்களால் அழைத்து வரப்பட்ட மந்திரவாதி.

அவரோடு கலைச் செல்வி குடும்பத்தார் உரையாடிக்கொண்டிருக்கும்போது திடீரென்று கலைச்செல்வியின் இரண்டு உதடுகளும் பரபரவென்று வீங்கிவிட்டன. பல்லி எச்சம் கொட்டி இப்படியாகி இருக்குமோ என்று எண்ணிக்கொண்டார்.

### உடலில் வீக்கம் பரவியது

மறுநாள் காலை மருத்துவமனைக்குச் சென்று ஊசி மருந்துகள் செலுத்திய பின் வீக்கம் சற்றுக் குறைந்தது. இருப்பினும் முதல் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை கண்கள், கன்னம், உதடுகள், மூக்கு, நெற்றி இவை மாறி மாறி வீங்கத் தொடங்கின. முடிவில் உடல் முழுவதும் தடித்து வீங்க ஆரம்பித்தது.
அது மட்டுமின்றி உடல் அரிப்பும் அதிகமாயிற்று. உச்சி முதல் பாதம் வரை சொறிவார். கையால் சொறிவது திருப்தியில்லாது போகவே, சீப்பு துடைப்பம் போன்றவற்றைப் பயன்படுத்துவார்.

மருத்துவமையில் அவரே ஒரு செவிலியராகப் பணிபுரிந்து வந்ததால் பெரிய பெரிய டாக்டர்கள் எல்லாம் வைத்தியம் செய்தார்கள். ஆனாலும் குணமானபாடில்லை.

### மந்திரவாதி மேல் சந்தேகம்

அன்றொரு நாள் நம் வீட்டிற்கு வந்த மந்திரவாதிதான் ஏதாவது செய்துவிட்டுப் போயிருப்பானோ என்றெல்லாம் அவர் உறவினர்கள் சந்தேகப்பட்டார்கள். வியாதி குணமாகாததால் சேத்துப்பட்டில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றார். குணமாகவில்லை.

வீட்டில் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. வேலைக்கும் போக முடியவில்லை. தோல் வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழி எவ்வளவு அனுபவம் வாய்ந்த பழமொழி என்பது அந்த நோயை அனுபவித்தபோதுதான் உணர்ந்தார் கலைச்செல்வி.

### நம்பிக்கை இழந்தது: வாழ்வில் விரக்தி ஏற்பட்டது

இனி வாழ்வில் இன்பம் மலர்வதற்கான நம்பிக்கை போய்விட்டது. இந்த வாழ்வு எதற்கு? நம் கதையை முடித்துக் கொள்ளலாமா? என்று நினைக்கிற அளவிற்கு வந்துவிட்டார் கலைச்செல்வி.

### தோல் வியாதி நிபுணர்

அவர் பணியாற்றிய மருத்துவமனையில் இருந்த டாக்டர் ஒருவர்; சென்னையில் உள்ள புகழ்பெற்ற தோல் வியாதி நிபுணரான ஒரு டாக்டர் பெயரைச் சொல்லி, அவரிடம் போய்ப்பார்! நான் கடிதம் தருகிறேன்! அவர் தரும் சிகிச்சையால் கண்டிப்பாகக் குணமாகும் என்று கூறி அனுப்பி வைத்தார்.

அந்த டாக்டர், தோல் வியாதி சிகிச்சையில் நிபுணர். மருத்துவ உலகத்திற்கு அவருடைய புகழும் திறமையும் தெரியும். அவரும் நல்ல முறையில் பரிசோதித்தார். பிறகு அந்தச் சோதனை, இந்தச் சோதனை எல்லாம் செய்துகொண்டு வரும்படிக் கூறினார். அலர்ஜிக் டெஸ்ட், இ.என்.டி. சோதனை அனைத்தும் செய்து முடித்து அவரிடம் சென்றார். அனைத்துச் சோதனை முடிவுகளையும் பார்த்துவிட்டு, அதுவரை உடம்புக்குள்ளிருந்த காப்பர்-டி-யை எடுத்து விடுமாறு கூறினார். பெண்களுக்கு காப்பர்-டி பொருத்திக் கொள்வதனால் அலர்ஜிக் ராஷஸ் (Allergic Rashes) வருவதுண்டு என்றும் கூறினார். பாலியஸ்டர் ஆடைகளைத் தவிர்க்கும்படியும், சன்லைட் சோப்பை மட்டுமே பயன்படுத்தும்படியும் அறிவுரை கூறி சில மருந்து மாத்திரைகளை எழுதிக்கொடுத்து அனுப்பினார். அவரது அறிவுரைகளைப் பின்பற்றியும்கூட அவர் உடம்பில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

உலகப்புகழ் பெற்ற தோல்வியாதி நிபுணர் அளித்த மருத்துவ சிகிச்சை கூடத் தோல்வியடைந்துவிட்டதே.. என்று குழம்பினார் திருமதி கலைச்செல்வி.

இனி நம் வாழ்வே வறண்டு போன பாலைவனந்தானா..?

(8ஆம் பக்க தொடர்ச்சி)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

எந்த டாக்டராலும் குணப்படுத்த முடியாத இந்த நோயுடன் வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று அழுதபடியும் சஞ்சலப்பட்டபடியும் இருந்தார்.

### உடன் பணியாற்றும் சக்தி மணிமேகலை அறிவுரை

திருமதி கலைச்செல்வியுடன் பணிபுரியும் செவிலி சக்தி மணிமேகலை மேல்மருவத்தூர் அன்னையின் பக்தை. சக்தி ஒளியைப் படித்துக் காட்டி மேல்மருவத்தூர் சென்றுவருமாறு தூண்டினார்.

1989ஆம் ஆண்டு கலைச்செல்வியின் பக்கத்து வீட்டுக்காரர் மருவத்தூர் புறப்பட்டார். அவரிடம் ஒரு காலண்டர் வாங்கி வருமாறு கேட்டுக்கொண்டார் கலைச்செல்வி. அவர் அடிகளார் படம் மட்டும் இருந்த காலண்டரை வாங்கி வந்து கொடுத்தார். அந்தப் படத்துக்குக் கண்ணாடி போட்டு வீட்டு வெளி வாசலில் மாட்டி வைத்து அந்தப் படத்தை வழிபட்டுப் பூசை செய்து வந்தார் கலைச்செல்வி.

எந்தப்பூசை செய்தும், அந்த மருவத்தூர் அம்மன் குறை தீர்க்கவில்லையே என்று கலைச்செல்வியின் கணவர் அலுத்துக் கொண்டார்.

### அம்பாளின் அருள் நிறைய இருக்கு!

இதற்கிடையில் கலைச் செல்வியின் நாத்தனார் கணவர், தமக்குத் தெரிந்த சோதிடர் ஒருவரை அழைத்து வந்து வீட்டில் பூசை நடத்தினார். அவர் சக்தி உபாசனை மேற்கொண்டவர். அவர் சொன்னார்.

“அம்மா! அம்பாளே உன்னுடன் பேசப்போகிறாள். நீ தைரியமாக இரு! உனக்கு அம்பாளின் அருள் நிறைய இருக்கு” என்று கூறிச் சென்றார். கலைச் செல்விக்கு மிகப்பெரிய ஆச்சரியம்! அம்பாள் எப்படி நம்மோடு நேரில் பேசுவார்கள்?

### அன்னையிடம் அருள்வாக்கு கேட்க வந்தது

சில நாட்கள் கழித்து அருள்வாக்கு கேட்க வந்தார் கலைச்செல்வி. அன்னை கூறினாள்:

“மகளே! உனக்கு வந்த நோய் செய்வினை காரணமாக வந்தது. இதனை உங்களுக்குத் தெரியப்படுத்தவே, அந்த மந்திரக்காரன் வந்தபோது வெளிப்படுத்தினேன். உன் உயிரையே அழிக்க முயற்சி நடந்தது. நீ என்னை மட்டும் நம்பு. என் பாதங்களைப் பற்றிக்கொள்! மந்திரம், சோதிடம் என்று அங்கங்கே அலையாதே!

நீயும் உன் கணவரும் செவ்வாடை அணிந்துகொண்டு தொண்டு செய்யுங்கள். தற்போதுள்ள வீட்டைக் காலி செய்துவிடு! உன் ஊர் கன்னியம்மன் கோயில் தரையைச் சீர் செய்து கொடு!

என் மகன் படம் உன் வீட்டின் வாயிலில் வைத்து வழிபாடு செய்ய வைத்தேன். இதைவிட என்ன பெரிய பாதுகாப்பு தேவை? என் மகன் வாசலில் உள்ள வரையில் ஒரு குறையும் வராது! அவனை யார் எப்படி நினைத்தாலும் நீங்கள் நம்புங்கள். என் பாலகனுக்கு அதர்வண பத்ரகாளியின் சக்தி முழுவதும் உண்டு. பௌர்ணமி தோறும் என் ஆலயத்துக்கு வந்து இரவு தங்கி மண்ணை மிதித்து என் மகனின் அருளைப் பெற்றுச்செல்”என்று கூறினாள்.

### அடிகளார் பார்வையின் மகத்துவம்

கலைச்செல்வியும் அவர் கணவரும் அன்னையின் ஆணைப்படி ஒன்பது பௌர்ணமிகள் மருவத்தூர் செல்வதாகத் திட்டமிட்டனர். ஆனால் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் நான்கு பௌர்ணமிகள் மட்டுமே செல்ல முடிந்தது. அந்த நான்கு பௌர்ணமிகளிலும் அடிகளார் தரிசனம் பெற்றனர்.

அதுமுதல் அவர் உடலில் பதித்திருந்த அலர்ஜி தழும்புகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துவிட்டன. உடலில் ஏற்பட்ட அரிப்புகள் முற்றிலும் நீங்கிவிட்டன.

அப்பப்பா..! எத்தனை வேதனைகள்! எத்தனை மருந்துகள்..? எவ்வளவு மாத்திரைகள்..? எவ்வளவு சிகிச்சைகள்? இவ்வளவிற்கும் கட்டுப்படாத அவர் தோல் வியாதி அடிகளார் அவர்களின் அருட்பார்வையினால் பூரண குணமடைந்தது.

### வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே..!

ஏசுபெருமான் கைகளால் தொட்ட அளவிலேயே தொழு நோயாளிகள் குணம் அடைந்தார்கள் என்று பைபிள் கூறுகிறது. “வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே! என்னிடம் வாருங்கள்! உங்களை இளைப்பாற வைக்கிறேன்”என்று மனித குலத்தை அழைத்ததாக பைபிள் சொல்கிறது.

“கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே! தருநிழலே!” என்று இறைவனைப் பாடுகிறார் வள்ளலார்.
இன்றைய கலியுகம் என்னும் கோடைக்கு நிழல் தருவதற்காகவே ஆதிபராசக்தி அடிகளார் என்னும் மானுடம் கொண்டு வந்திருக்கிறாள்.

(தொடர்ச்சி…11ஆம் பக்கம்)

**“நவராத்திரி அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி முகர்வது மூன்று சிக்கல்கள் தீர்வதற்கு. வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றிற்கு மகத்துவம் உண்டு.”**
**- அன்னையின் அருள்வாக்கு**

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

பார்வை மாத்திரத்தாலேயே தீராத தோல் வியாதியை அடிகளார் தீர்த்து வைத்தார்கள். அதற்குக் கலைச்செல்வியின் வாழ்க்கை ஒரு உதாரணம்!

நம்பிக்கையும் விசுவாசமும் வைத்தவர்களுக்கெல்லாம் அன்று ஏசு அருள்பாலித்தார் என்று பைபிள் சொல்கிறது.

ஆரம்பத்தில் நம்பிக்கையில்லாதவர்களையும் விசுவாசம் வைக்காதவர்களையும் ஈர்த்து அருள்பாலித்தது அடிகளாரின் அவதாரம்!

அடிகளார் அவதாரம் என ஒன்று வரவில்லையே திருமதி கலைச்செல்வியின் கதை என்றோ முடிந்துபோயிருக்கும்.

# நவராத்திரி இலட்சார்ச்சனை

நமக்காக நாமே வேண்டிக்கொள்வதைவிட நமக்காகப் பிறர் வேண்டுவதும், பிரார்த்தனை செய்வதும். அர்ச்சனை செய்வதும் மிகுந்த பயன் தரும். அத்தகைய பிரார்த்தனைக்குச் சக்தி அதிகம். இந்த வாய்ப்பு இலட்சார்ச்சனை மூலமாக நமக்குக் கிடைக்கின்றது.

நவராத்திரி விழாவின்போது ஆயிரக்கணக்கான மகளிர் சக்திகள் புற்று மண்டபத்திலும் கருவறை மண்டபத்திலும் அமர்ந்து, நமது பெயரைச் சொல்லி, நமது நட்சத்திரம் சொல்லி, “இன்னார் குடும்பம் நலம் பெற, வளம்பெற ஓம் சக்தியே!” என்று சங்கல்ப்பத்துடன் சித்தர் பீடத்தில் இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது.

**இலட்சார்ச்சனை சங்கல்ப்ப குங்கும அர்ச்சனையின் பலன்கள்:**

- குடும்ப வளம், தொழில் வளம் கிடைக்கும், மன நலம் கிடைக்கும்.
- ஏவல், பில்லி, சூனிய, தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு.
- திருமணத்தடை நீங்கும், குழந்தைப்பேறு கிட்டும்.
- கடன் தொல்லை, கிரக தோசத்தில் இருந்து விடுபடுதல்.
- அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுதலை கிட்டும்.

நவராத்திரி ஒன்பது நாளும் இப்படி மற்றவர்களின் நன்மைக்காக இந்த இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. நமது இலட்சியம் நிறைவேற இந்த இலட்சார்ச்சனை துணைபுரிகின்றது.
பக்தர்கள், தங்கள் அருகாமையிலிருக்கும் மன்றங்களையோ அல்லது மன்ற சக்திகளையோ தொடர்புகொண்டு தங்கள் பெயர்களையும், நட்சத்திரங்களையும் பதிவு செய்து மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் நடைபெறும் இலட்சார்ச்சனையில் பங்குகொள்ளுங்கள்.

**இலட்சியங்களை அடைய இலட்சார்ச்சனை செய்வோம்!**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் நவராத்திரி நாளில் அன்னையால் ஏற்றப்படும் அகண்ட தீபத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி அந்த தீப தரிசனத்தைப் பெற்றுச் செல்லுங்கள். அங்கு சென்று தரிசனம் பெற வாய்ப்பு கிடைக்காதவர்கள் அருகிலுள்ள அன்னையின் துணை ஆலயங்களான மன்றங்களில் ஏற்றப்படும் அகண்ட தீபத்திற்கு முக்கூட்டு எண்ணெய் ஊற்றி தரிசனம் பெறுங்கள்.
இவற்றால் உங்கள் ஊழ்வினைக் கொடுமைகள் தணியும்.

## நவராத்திரி

“நவராத்திரி விழா நாட்களில் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்டு. அகண்ட ஜோதி தரிசனம் செய்ய வேண்டும்.”
“நவராத்திரி விழா என்பதும் ஜோதி தரிசனம் என்ற தத்துவம் கொண்டது தான்.
நான்கு பேர் சேர்ந்து செய்யும் தொண்டு, நான்கு பேர் சேர்ந்து செய்யும் அர்ச்சனை என்ற கூட்டு முயற்சி கொண்டதுதான்.”

**அன்னையின் அருள்வாக்கு**

# Sydney - Mandrams - Upcoming Events – September 2017



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 01.09.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 05.09.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 08.09.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



### அன்னதானம் - புண்ணியப்பலன்

"இங்குப் பல்லாயிரக்கணக்கானவர்கட்கு அன்னதானம் அளிக்கும் பணியில் நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள். எத்தனை பேர்க்கு நீங்கள் உணவு அளிக்கிறீர்களோ அவ்வளவு புண்ணியமும் உங்களுக்கும் உங்கள் குடும்பங்கட்கும் சேரும்.

இந்த அன்னதானமும், ஆடைதானமும் கடைசி வரை உங்களையும் காக்கும். உங்கள் குடும்பத்தினரையும் காக்கும்."

### இருமுடி: சக்தி மாலை

"சக்தி மாலை அணிந்து இருமுடி செலுத்துவதில் உள்ள பலன் எவ்வளவு என்று பலருக்குத் தெரியாது. அதில் எவ்வளவோ பலா பலன்களை வைத்து இந்த முறையை அம்மா உங்களுக்குக் கொடுத்திருக்கிறது.

கோவை ஒட்டர் பாளையத்திலிருந்து அந்த மன்றத்தினர் 30 பேர் சக்தி மாலை அணிந்து இருமுடி எடுத்துக்கொண்டு 24.07.1987 அன்று ஒரு பஸ்ஸிலும், ஒரு காரிலும் புறப்பட்டு வந்திருக்கிறார்கள்.

வழியில் ஆத்தூருக்கு அருகிலே அந்தக்காருக்கு விபத்து அந்த ஃபியட் கார் மூன்று முறை உருண்டு தலைகீழாகக் கிடந்தது. அதில் ஆறுபேர் பயணம் செய்து வந்திருக்கிறார்கள். அந்தக் காருக்குப் பலத்த சேதம்! உள்ளே இருந்த எவருக்கும் ஒரு சிராய்ப்பு கூட ஏற்படவில்லை! எப்படி இந்த அதிசயம் நடந்தது? காருக்குள்ளே இரு முடியும், இருமுடி அணிந்தவர்களும் இருக்கிறார்கள். ஒழுங்காக விரதம் இருந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களை அம்மா காப்பாற்றுகிறாள்.

அம்மா சொல்லியுள்ள முறைகளைப் பின்பற்றிச் சக்தி மாலை அணிவதில்லை. ஒழுங்காக விரதம் கடைப்பிடிப்பதில்லை. இடையில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் மட்டும் அன்னையைத் திட்டுகிறார்கள்."

## Melbourne - Mandrams – Upcoming Events – September 2017

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com
www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month
**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **10.09.2017** | **Sunday** | **09.00a.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing |
| | | **06.10p.m.** | **"Thiru Vilakku Pooja"** **"திருவிளக்குப் பூஜை"** |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

### ஒரு மனிதன் எப்போது ஆன்மிகவாதி ஆகிறான்?

தெய்வ நம்பிக்கை உள்ளவர்களைத்தான் நாம் ஆன்மிகவாதி என்று குறிப்பிடுகிறோம். தெய்வ நம்பிக்கை இருந்தாலும், தெய்வ நம்பிக்கை இல்லாவிட்டாலும் ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக் கொண்டு அதை நல் வழியில் செலுத்துபவர்கள் அனைவருமே ஆன்மிகவாதிகள்தான். ஆன்மாவை நல்வழிப்படுத்தி, அதனால் பலருக்கும் நன்மை செய்யும் தன்மையை இறைவன் மனித இனத்திற்கு மட்டும்தான் கொடுத்திருக்கிறான்.

தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு பிறருக்குத் தீமை செய்பவர்கள் ஆன்மிகவாதிகள் அல்ல. தெய்வ நம்பிக்கை இல்லாமல் ஆன்மிக உணர்வோடு பிறருக்கு நன்மை செய்பவர்களை ஆன்மிகவாதிகள் அல்ல என்றும் ஒதுக்கிவிட முடியாது. தெய்வ நம்பிக்கை வேறு, ஆன்ம உணர்வு வேறு. பிற ஆன்மாவை மதித்து நடப்பவர் அனைவருமே ஆன்மிகவாதிகள்தான். மதவாதத்திற்கும், ஆன்மிகத்திற்கும் வேறுபாடு உண்டு. அம்மா வற்புறுத்துவது மதவாதத்தை அல்ல, ஆன்மிகத்தைத்தான். அதனால்தான் அம்மா எல்லா மதத்தினரையும் அரவணைத்துச் செல்கிறார்கள். "ஒரே தாய், ஒரே குலம்"என்ற தாரக மந்திரத்தை அருளி உள்ளார்கள்.

எப்போது ஒரு மனிதன் தன் ஆன்மாவைத் தட்டி எழுப்பி, தூய்மைப்படுத்தி அதற்கு ஏற்ற வேலைகளைக் கொடுக்கிறானோ, அப்போதுதான் அவன் ஆன்மிகவாதி ஆகிறான். அதனால்தான் அம்மா அடிக்கடி அருள்வாக்கில், "ஆன்மாவைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார்கள்.

## Melbourne - Mandrams – Upcoming Events – September 2017



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House**,
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 01.09.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 05.09.2017 | MONDAY– திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 08.09.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

### நவராத்திரி அகண்ட தீபம் ஏற்றலும் தரிசனமும்

**Glen Weverley Scout Hall**,
Whites Lane – Glen Waverley 3150 – (Mel.Ref.: 71 D 7)

நவராத்திரி 11 நாட்களும் சிறப்பு அலங்காரங்களுடன் குங்கும இலட்சார்ச்சனை, நவராத்திரி சிறப்பு நிகழ்ச்சிகளுடன் வழிபாடுகளும் இடம்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 20.09.2017 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 1ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 21.09.2017 | வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 2ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 22.09.2017 | வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | “அகண்டம் தீபம் ஏற்றல்” நவராத்திரி 3ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 23.09.2017 | சனி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 4ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 24.09.2017 | ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | “அகண்டம் தீபம் குளிர்வித்தல்” நவராத்திரி 5ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 25.09.2017 | திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 6ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 26.09.2017 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 7ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 27.09.2017 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 8ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 28.09.2017 | வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 9ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 29.09.2017 | வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 10ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 30.09.2017 | சனி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 11ஆம் நாள் கூட்டு வழிபாடு |

### Lalor

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 03.09.2017 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |




### இலட்சார்ச்சனையின்போது...


“இலட்சார்ச்சனை நடைபெறுகிறபோது பயபக்தியுடன் மந்திரம் படிக்க வேண்டும். சங்கல்ப்பம் என்பது ஏதோ ஒரு சந்தர்ப்பத்திற்காகச் செய்யப்படுகிறது என்று அமையாமல் மற்றவர்கள் சங்கடத்தைத் தீர்ப்பதற்காகச் செய்யப்படுவது என்று கருத வேண்டும்.”

- அன்னையின் அருள்வாக்கு

# Sydney - Mandrams - Upcoming Events – September 2017



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 01.09.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.09.2017 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Thiru Vilakku Pooja "திருவிளக்குப் பூஜை" |
| 15.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.09.2017 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

<u>நவராத்திரி விழா</u> 30.09.2017 – சனிக்கிழமை

**அகண்ட தீபம் ஏற்றலும் தரிசனமும்**

**காலை 7.30 மணி**

அகண்டத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி
ஜோதியை தரிசித்து நம் ஊழ்வினைகளைக் களைவோமாக!

**அகண்டம் குளிர்வித்தல்** மாலை 5.00 மணி

**"அகண்டத்திற்குக் கண்டத்தை நிவர்த்திக்கும் தன்மை உண்டு" – அன்னையின் அருள்வாக்கு**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னைக்கு

## நவராத்திரி கால அபிடேக, சிறப்பு அலங்காரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 20.09.2017 | புதன் | அபிடேகம் | மங்கள நாயகி - சிறப்பு அலங்காரம் | மஞ்சள் காப்பு |
| 21.09.2017 | வியாழன் | அபிடேகம் | சித்திர சபை (குழல்வாய்மொழி) - சிறப்பு அலங்காரம் | சிறுதானிய காப்பு |
| 22.09.2017 | வெள்ளி | அபிடேகம் | ஆதிபராசக்தி - சிறப்பு அலங்காரம் | குங்குமக்காப்பு |
| 23.09.2017 | சனி | அபிடேகம் | கண்ணன் யசோதை - சிறப்பு அலங்காரம் | மிட்டாய் காப்பு |
| 24.09.2017 | ஞாயிறு | அபிடேகம் | ஆதிபராசக்தி - சிறப்பு அலங்காரம் | வேப்பிலைக்காப்பு |
| 25.09.2017 | திங்கள் | அபிடேகம் | கன்னியாகுமரி அம்மன் - சிறப்பு அலங்காரம் | சந்தனக்காப்பு |
| 26.09.2017 | செவ்வாய் | அபிடேகம் | நௌகேஸ்வரி - சிறப்பு அலங்காரம் | துளசிக்காப்பு |
| 27.09.2017 | புதன் | அபிடேகம் | கருகாத்தம்மன் - சிறப்பு அலங்காரம் | நவதானியக்காப்பு |
| 28.09.2017 | வியாழன் | அபிடேகம் | முத்துமாரியம்மன் - சிறப்பு அலங்காரம் | உலர் பழங்கள் |
| 29.09.2017 | வெள்ளி | அபிடேகம் | பிரம்ம வித்தியாம்பிகை - சிறப்பு அலங்காரம் | விபூதிக்காப்பு |
| 30.09.2017 | சனி | அபிடேகம் | நடன காளி (திருமாங்காடு) - சிறப்புஅலங்காரம் | கற்கண்டு |

**20.09.2017 முதல் 30.09.2017 வரை குங்கும இலட்சார்ச்சனை நடைபெறும்.**

# Divine Miracles at Melmaruvathur

## An experience with a follower of Periyar:

It is not necessary to go to Mother to get her blessing. Sometimes just one visit to her might be fruitful.

A follower of Periyar was sent to Mother's Temple under the compulsion of a friend. He was an atheist. He listened to Mother. Mother told him everything about his life and problems. He listened to her and said "Mother1 I am greatly surprised by what you have said. How did you know..? I am a man who believes in commonsense. Mother said, with cheer, "Son, there are people who merely chant my mantras, do Pooja but do not have complete faith in me.

You are far better than those people. You need not believe in me. But do you believe that you have a mother who gave birth to you. Consider her to be your God". She then gave her a neem leaf to him. It turned into a piece of camphor. You have been a helpful person so I shall make you live healthily.

He came out and showed the piece of camphor to a friend and said, 'I don't have a room specially for Pooja nor do I have any pictures of Gods', What shall I do with this? His friend remarked jokingly, "You will have Periyar's pictures at home. Place the camphor underneath his picture and pray".

***

# கண் கொடுத்த கலச தீர்த்தம்

**திரு. மாரிமுத்து – பள்ளிப்பாளையம் - ஈரோடு**

நான் பள்ளிப்பாளையம் அக்கிரகாரம் மகளிர் மன்றத்தில் என்னால் முடிந்த தொண்டுகளைச் செய்து வருகிறேன். நான் கட்டிடம் கட்டும் மேஸ்திரி வேலை பார்ப்பவன். எனக்கு ஒரு மகளும், ஐந்து மகன்களும் இருக்கிறார்கள். அன்றாடம் கூலி வேலை செய்கின்றேன்.

எங்கள் மன்றத் தலைவி சக்தி தைலாம்பாள் வெங்கடாசலம் அவர்கள் ஒரு நாள் என்னிடம், "மாரிமுத்து நீதான் அம்மாவின் மன்றக் கட்டிடம் கட்டித் தர வேண்டும். கோபுர வேலையும் நீதான் செய்யப் போகிறாய்" என்றார்கள்.

நானோ, "அம்மா! நான் இதுவரையில் வீட்டுக் கட்டிடங்களைத்தான் கட்டியுள்ளேன், கோயில் கட்டுவது எனக்குத் தெரியாத ஒன்றாயிற்றே..?" என்றேன்.

"கவலைப்படாதே.. ஓம் சக்தி என்று எப்போதும் உச்சரித்தபடி வேலையைச் செய். அம்மா பார்த்துக்கொள்வாள்" என்றார் அவர்.

அவ்வாறே மன்றக் கட்டிடமும், கருவறையும் கட்டி முடித்தேன். அம்மாவின் பணியைச் சிரமேற்கொண்டு தொண்டு செய்ததால் இந்த ஏழைத் தொண்டனின் குடும்பத்தில் உள்ள கவலைகளை அம்மா போக்கினாள். சாப்பாட்டுக் கஷ்டம், துணிமணி கஷ்டம் எல்லாவற்றையும் போக்கி நிம்மதியான வாழ்க்கை அளித்தாள்.

மன்றத் தலைவி அடிக்கடி அம்மாவைப் பற்றிக்கூறி என்னை எச்சரிப்பார்கள். "அம்மாவுக்கு உண்மையாகவே தொண்டு செய்து வந்தால் உயரத்தே வைப்பாள். ஏமாற்ற எண்ணினால் உயரப் பறக்கும் பட்டம் அறுந்துபோன பின் பூமியில் குப்புற விழுவது போல் விழ வேண்டிய நிலை தான் ஏற்படும்" என்பார்கள். அவர்கள் அறிவுரை என் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது.

அம்மாவின் தொண்டர்களுக்கு சோதனை வருவது போல எனக்கும் ஒரு சோதனை வந்தது.

என் மகன் தேவராஜன் என்பவன் நான்கு வயதுப் பையன். குறும்புக்காரன். ஒரு நாள் மற்ற பையன்களோடு விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு போக்கிரிப் பையன் என் மகனை மிகப் பலமாக அடி அடி என்று அடித்து விட்டான். பையன் அங்கேயே மயங்கி விழுந்து விட்டான்.

எனக்குச் செய்தி வந்தது. ஓடிப் போய்ப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். அந்தப் போக்கிரிப் பையன் அடித்த அடிகளால் என் மகனுடைய கண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அந்தக் கருவிழியின் அருகே வெண்மைப் பகுதியெல்லாம் கலங்கி விட்டது. கெட்டுப்போன ஒரு கோழி முட்டை எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

(தொடர்ச்சி…17ஆம் பக்கம்)

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2017 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி | 20 | 05.09.2017 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 03 | 19.09.2017 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 04 | 20.09.2017 | புதன் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 19 | 05.10.2017 | வியாழன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 02 | 19.10.2017 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 17 | 03.11.2017 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 02 | 18.11.2017 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 17 | 03.12.2017 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 02 | 17.12.2017 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 10 | 25.12.2017 | திங்கள் | கிறிஸ்மஸ் |

## கண் கொடுத்த...

உடனே ஒரு டாக்டரிடம் எடுத்துச் சென்றேன். "கண்களை ஆபரேஷன் செய்து பார்த்தால்தான் முடியும். இனி இவன் வேலைக்குச் செல்ல முடியாது. பார்வை வரும் என்பதை இப்போது நிச்சயமாகச் சொல்ல முடியாது." என்று கூறிவிட்டார் அந்த டாக்டர். மற்ற உறுப்புகள் பாதிக்கப்பட்டால் சமாளிக்கலாம் கண்ணே போனால்..?

சுமக்க முடியாத வேதனையோடு எங்கள் மன்றத் தலைவியிடம் ஓடி வந்தேன். "அம்மா! என் பையனுக்கு இப்படி ஆகி விட்டதே..? என்று கதறி அழுதேன் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அதன்படிச் செய்கிறேன். என் மகனுக்குக் கண் பார்வை வந்தாலும் சரி போனாலும் சரி! என்ன செய்யலாம்? சொல்லுங்கள்" என்று சொல்லி அழுதேன்.

என் பரிதாப நிலையைப் பார்த்த மன்றத் தலைவி, "மாரிமுத்து! என் கையில் ஒன்றுமில்லை. அம்மா உன்னைக் கைவிட மாட்டாள். எதற்கும் பயப்படாமல் கலச பூஜையில் வைக்கப்பட்ட கலச தீர்த்தத்தையே ஒரு துளி கண்ணில் விட்டுப் பார்க்கலாம். தலைக்குமேல் போய்விட்டது. இனிச் சாண்போனால் என்ன? முழம் போனால் என்ன? பார்வை கிடைப்பது நிச்சயமல்ல! என்று டாக்டர்களே சொல்லி விட்டார்கள். இந்த நிலையில் நமக்கு வேறுவழியில்லை. அந்தக் கலச தீர்த்தம் தான் நமக்கு வழி!" என்று கூறினார்கள்.

தினமும் அவன் கண்ணில் ஒரு துளி கலச தீர்த்தம் விட்டு வந்தேன். மூன்று முறைதான் அவ்வாறு செய்தேன். கலங்கிக் கிடந்த வெள்ளை விழி குணமாகி வருவது தெரிந்தது.

பையனைப் பற்றிய கவலையை அம்மாவிடம் போட்டுவிட்டுத் தொடர்ந்து அம்மாவுக்குத் தொண்டு செய்தேன். மன்றப் பணிகள் செய்தேன்.

அம்மாவின் அருளால் சில நாட்கள் கழித்துக் கண்கள் பழைய நிலைக்குத் திரும்பின. கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையும் திரும்பிற்று.

என் மகனுக்குக் கலச தீர்த்தத்தால் வேப்பிலையால் கண் பார்வையை மீட்டுக் கொடுத்தாள் அந்த ஆதிபராசக்தி.!

ஓம் சக்தி!

## உயிர் பிரிந்தாலும்...

"உடலை விட்டு உயிர் பிரிந்தாலும் ஆன்மா உன்னிடம்தான் உள்ளது.
அந்த ஆன்மா சுத்தமாக இருக்க வேண்டும்."

- அன்னையின் அருள்வாக்கு

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2017

| | | | | |
|---|---|---|---|---|
| 02.09.2017 | சனி | ஆவணி | 17 | ஏகாதசி விரதம் |
| 03.09.2017 | ஞாயிறு | ஆவணி | 18 | பிரதோஷ விரதம்<br>இரதோற்சவம்<br>- ஸ்ரீ சிவா – விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |
| 04.09.2017 | திங்கள் | ஆவணி | 19 | ஆவணி ஓணம் |
| 05.09.2017 | செவ்வாய் | ஆவணி | 20 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 07.09.2017 | வியாழன் | ஆவணி | 22 | மஹாளயபட்சாரம்பம் |
| 08.09.2017 | வெள்ளி | ஆவணி | 23 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டா |
| 09.09.2017 | சனி | ஆவணி | 24 | சங்கடசதுர்த்தி |
| 10.09.2017 | ஞாயிறு | ஆவணி | 25 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 11.09.2017 | திங்கள் | ஆவணி | 26 | கார்த்திகை விரதம் |
| 13.09.2017 | புதன் | ஆவணி | 28 | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| 16.09.2017 | சனி | ஆவணி | 31 | ஏகாதசி விரதம் |
| 18.09.2017 | திங்கள் | புரட்டாதி | 02 | பிரதோஷ விரதம் |
| 19.09.2017 | செவ்வாய் | புரட்டாதி | 03 | அமாவாசை விரதம் |
| 20.09.2017 | புதன் | புரட்டாதி | 04 | நவராத்திரி பூஜை ஆரம்பம் |
| 23.09.2017 | சனி | புரட்டாதி | 07 | புரட்டாசி சனி – 1ஆம் வாரம் |
| 24.09.2017 | ஞாயிறு | புரட்டாதி | 08 | சதுர்த்தி விரதம் |
| 26.09.2017 | செவ்வாய் | புரட்டாதி | 10 | ஷஷ்டி விரதம் |
| 29.09.2017 | வெள்ளி | புரட்டாதி | 13 | சரஸ்வதி பூஜை - மஹா நவமி – ஆயத பூஜை |
| 30.09.2017 | சனி | புரட்டாதி | 14 | விஜயதசமி – கேதார கௌரி விரத ஆரம்பம்<br>புரட்டாசி சனி – 2ஆம் வாரம் |
| 07.10.2017 | சனி | புரட்டாதி | 21 | புரட்டாசி சனி – 3ஆம் வாரம் |
| 14.10.2017 | சனி | புரட்டாதி | 21 | புரட்டாசி சனி – 4ஆம் வாரம் |
| 19.10.2017 | வியாழன் | ஐப்பசி | 03 | அமாவாசை விரதம்- தீபாவளி பண்டிகை –<br>கேதார கௌரி விரதம் நிறைவு |
| 20.10.2017 | வெள்ளி | ஐப்பசி | 04 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் ஆம்பம் |
| 25.10.2017 | புதன் | ஐப்பசி | 09 | சூரன் போர் - ஸ்கந்த ஷஷ்டி விரதம் |

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

**ஆன்மிக விடைதேடும்**
**அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த**

**www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்**

**"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற**

**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**